**மண்முனை தென்மேற்கு பிரதேச சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஆம் ஆண்டு ஜுன் 30 ஆம் திகதியன்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 ஆம் ஆண்டு ஜுன் 19 தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் மண்முனை தென்மேற்கு பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டு கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும் | எதிர்காலத்தில் திருத்தப்படும். |

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இருதியில் உள்ளவாரான நிலுவை முத்திரை தீர்வையானது ரூபா 5,950,450 தொகையாக கணிப்பிடப்பட்ட போதிலும், நிதிக்கூற்றுக்களில் அவ் நிலுவை ரூபா 2,996,691 தொகையாக காட்டப்பட்டுள்ளது. | குறித்த ஆண்டில் காசாக பெறப்பட்ட வருமானத்தை மாத்திரம் கருத்தில் கொள்ளாமல் பெறவேண்டிய வருமானத்தையும் கருத்தில் கொள்ளல் வேண்டும் | பிரதேச சபையினால் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள முத்திரைத் தீர்வை நிலுவை ரூபா 2,996,691 ஆகும். இது காணிப்பதிவாளர் நாயகத்திடம் இருந்து பெறப்பட்ட தரவுகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மாணவர்களினால் செலுத்தப்பட்ட கணனி கல்வி கொடுப்பனவு ரூபா 146,729 வருமானத்திற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கிடப்பட்டு கணக்குகளில் காட்டப்படவேண்டும் | உரிய கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய தற்போது வருமானத்திற்கு மாற்றப்படும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. |

**1.3.3 ஆவணச்சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| காட்டப்பட்ட ரூபா 213,432,560 தொகை பெறுமதியான 04 விடயங்களுக்கு காணி உறுதிகள், நிலையான சொத்து பதிவேடுகள், உரிமைப்பத்திரங்கள், மற்றும் மதிப்பிட்டு அறிக்கைகள் போன்ற சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்படவேண்டும் | நிலையான சொத்து பதிவேடு முறையாக பராமரிப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் உரிமைக்கான ஆவணங்கள் கோவைப்படுத்தப்பட்டு பாதுகாப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. |

**1.4 இணங்காமைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| சட்டங்கள்,விதிகள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | | |
| 2018 ஜனவரி 24 ஆம் திகதிய 02/2018 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | சபையில் பணியாற்றும் ஆளனியினருக்கு மனித வளத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை | சபையில் பணியாற்றும் ஆளனியினருக்கு மனித வளத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. |

## 2 நிதி மீளாய்வு

-----------------

### 2.1 நிதி விளைவுகள்

---------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,953,013 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,357,433 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

--------------------------------

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 650,350 | 650,650 | 548,445 | 177,310 | 660,350 | 784,780 | 709,375 | 75,405 |
| வாடகைகள் | 5,507,145 | 3,370,112 | 3,370,112 | - | 924,450 | 1,060,498 | 1,060,498 | - |
| அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 1,375,000 | 1,949,930 | 1,949,930 | - | 1,145,450 | 691,655 | 691,655 | - |
| ஏனைய வருமானம் | 11,849,000 | 8,594,393 | 9,736,681 | 8,389,404 | 11,295,000 | 13,579,314 | 8,587,238 | 9,531,693 |
| மொத்தம் | **19,381,495** | **14,565,085** | **15,605,168** | **8,566,714** | **14,025,250** | **16,116,247** | **11,048,766** | **9,607,098** |

#### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் தீர்வைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நீதிமன்ற தண்டப்பணம்<br>2019 ஆம் ஆண்டுக்கான நீதிமன்ற தண்டப்பணத்தை முழுமையாக பெறுவதற்கு கணக்காய்வுத் | குறித்த ஆண்டுக்கான தண்டப்பணம் உரிய காலப்பகுதியில் | பெறப்படவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| திகதியான 2020 மே 20 ஆம் திகதிவரை சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறப்பட்டிருத்தல் வேண்டும். | |
| (ஆ) முத்திரை தீர்வைகள் | | |
| 2019 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குரிய முத்திரைத் தீர்வைகள் பிரதேச சபையினால் கணக்கிடப்பட்டு பதிவாளர் நாயகத்திடமிருந்து உரிய காலத்திற்குள் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த ஆண்டுக்கான தண்டப்பணம் உரிய காலப்பகுதியில் பெறப்பட்டிருத்தல் வேண்டும். | முத்திரை தீர்வை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் தற்போது முத்திரை தீர்வை தொடர்பான ஆவணங்கள் மாகாண இறைவரி திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) உப விதிகள் | | |
| 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருமானம் மற்றும் ஒழுங்கமைப்புக்காக முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத் தப்பட்டிருக்கவேண்டும். இருந்தும், பிரதேச சபையினால் 05 உபவிதிகள் தயாரிக்கப்பட்டு சபையினால் 2012 ஆம் ஆண்டு உப விதிகள் தொடர்பான பிரேரணைகள் கிழக்கு மாகாண உள்ளுராட்சி அமைச்சரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்ட போதிலும், 2019 திசெம்பர் 31 வரையிலும் அவற்றிக்கான அனுமதியைப் பெற்று நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உபவிதிகள் உருவாக்கப்பட்டு அதனை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்திருத்தல் வேண்டும். | உப விதிகள் தயாரிக்கப்பட்டு உரிய அனுமதி பெறும் பொருட்டு அனுப்பி வைத்து நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| (ஆ) வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்<br>-----------------------------------------------<br>வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். | தற்போது தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) திண்மக்கழிவு முகாமைத்துவம்<br>-----------------------------------------------<br>திண்ம கழிவு முகாமைத்துவத்தினால் சபை சேதன பசளை உற்பத்தி மற்றும் மீள்சுழற்சி விற்பனை போன்ற திட்டங்களை செயற்படுத்தி வருமானம் உழைக்கும் நடவடிக்கை எதனையும் எடுத்திருக்கவில்லை | திண்ம கழிவு முகாமைத்துவத்தினால் சபை சேதன பசளை உற்பத்தி மற்றும் மீள்சுழற்சி விற்பனை போன்ற திட்டங்களை செயற்படுத்தி வருமானம் உழைக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சனாதிபதியின் சுற்றுநிருபத்திற்கு அமைவாக 20 பேர்ச்சு நிலப்பரபுக்கு கூடிய நிலப்பரப்பினைக் கொண்ட குடியிருப்பாளர்களிடம் இருந்து உக்கக் கூடிய திண்மக்கழிவுகளைச் சேகரிக்க தேவையில்லை இருந்தும் காணி கிடைக்கப் பெறும் பட்சத்தில் உக்கக்கூடிய கழிவுகள் சேகரித்து உழைக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்கலாம் என்பதனை தெரிவித்துக்கொள்கின்றோம். |
| (ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு<br>----------------------------------------<br>சபையினால் 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அடைந்து கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுத்திருத்தல் வேண்டும். | உரிய வழிகாட்டுதல்களின் அடிப்படையில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு எதிர்காலத்தில் செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றது. |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

-------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பண்டாரியாவெளி, கற்சேனை, மாவடிமுன்மாரி போன்ற இடங்களில் உள்ள குடும்பங்களுக்கு நீர் வழங்கல் சேவையை பெற்றுக்கொள்வதற்காக வழங்கப்பட்டிருந்தும் ரூபா 6,992,833 தொகை கணக்காய்வுத் திகதியான 2020 | குறித்து செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படவேண்டும். | எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாமல் இருப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும் தயவுடன் அறியத்தருகிறேன். |

| | | |
|---|---|---|
| மே 20 ஆம் திகதிவரை இவ் செயற்திட்டம் குறித்து பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) மீளாய்வாண்டில் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களில் 49 விண்ணப்பங்கள் காலம் தாழ்த்தி அனுமதி வழங்கப்பட்டமை அவதானிக்கப்பட்டிருந்தது. | உரிய காலப்பகுதியில் அனுமதி வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். | விண்ணப்பங்களை பார்வையிட்டு தொழிநுட்ப உத்தியோகத்தரின் அறிக்கையை பெற காலம் தாழ்த்தப்பட்டதன் காரணமாக விண்ணப்பப் படிவங்களும் காலம் தாழ்த்தப்பட்டுள்ளது. |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 03 பதவிகளுக்கு 04 வெற்றிடம் மற்றும் 02 பதவிகளுக்கு 08 மேலதிக ஆளணிகள் உள்ளன. | வெற்றிடம் மற்றும் மேலதிக ஆளணியினை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்திருத்தல் வேண்டும். | வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. |

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| குத்தகை உடன்படிக்கை நிபந்தனை இல 05 இன் பிரகாரம் சித்தி பெறும் விலை மனுதாரர்கள் ஆதனப்பிணை அல்லது ரூபா 25,000 காசுப்பிணை கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தும் குறித்த 15 உடன்படிக்கைகள் சார்பாக எதுவித பிணை ஆதனமும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதனால் ரூபா 797,295 தொகைக்கு எடுக்கப்பட்ட பொதுச்சந்தை வரி வசூல் குத்தகை இடைநடுவில் நிறுத்தப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | ஆதனப்பிணை அல்லது காசுப்பிணை கட்டாயமாக பெறப்பட வேண்டும். காசுப்பிணை குத்தகைத் தொகைக் கேற்ப அறவிடப்பட வேண்டும் | இனிவரும் காலங்களில் குத்தகை உடன்படிக்கை நிபந்தனை இல 05 ஏனைய உடன்படிக்கையில் தொகைக்கேற்றவாறு மாற்றம் செய்யப்பட்டு அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் மீளாய்வாண்டிற்கான உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் நடைபெற்றிருக்கவில்லை | உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் நடைபெற்றிருத்தல் வேண்டும். | உள்ளகக் கணக்காய்வு குழு அமைக்கப்பட்டு கடமைப்பட்டியல் பொறுப்புக்கள் வழங்கப்பட்டு தற்பொழுது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு குழுக் கூட்டங்கள் நடைபெற்றிருக்கவில்லை | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு குழுக் கூட்டங்கள் நடைபெற்றிருத்தல் வேண்டும். | கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் தற்பொழுது கிரமமாக நடாத்தப்பட்டு வருகின்றது. |